DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.309/15

Deposition of Witness: PW 6

| | |
|---|---|
| Name முருகன் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.12.2021

கு.வி.மு.ச.பிரிவு **244** ன் கீழ் விசாரணை

நான் சிவலிங்கநாயக்கன்பட்டியில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்துவருகிறேன். புகார்தாரரை எனக்கு தெரியும். எதிரிகளை தெரியும். நாகலாபுரம் கிராமம் சிவலிங்கநாயக்கன்பட்டியில் புகார்தாரருக்கு சொந்தமான நிலம் உள்ளது. அந்த நிலத்தை புகார்தாரர் எங்கள் ஊரைச்சேர்ந்த வேலுச்சாமி என்பவரிடம் கிரயம் வாங்கினார். 4.12.14 ம் தேதி நான் துரைப்பாண்டி, ராஜேஷ், ஜெயபிரகாஷ் ஆகியோர் சென்றோம். நாங்கள் காவல்நியைம் சென்றபோது சுருளியம்மாள், விஜயபாண்டி, சௌந்தராஜ்பாண்டி ஆகியோர்களை உட்கார வைத்திருந்தார்கள். அப்போது அங்கிருந்த காவல் ஆய்வாளர் மேற்படி நபர்களிடம் சொத்து சம்மந்தமாக கிரய ஆவணத்தை இரத்து செய்துகொடுக்கவேண்டும் என்றும் அவ்வாறு கொடுத்தால் தான் வெளியே விடுவோம் என்று சொன்னார். மாலை 5 மணிவரை அவர்களை காவல்நிலையத்தில் உட்கார வைத்துவிட்டு அதன்பிறகு தேனி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மூவரையும் அழைத்து சென்றார்கள். போலிசார் அவர்களுடன் சென்றார்கள். இரத்துபத்திரம் எழுதிதராவிட்டால் கைது செய்வோம் என்று மிரட்டினார்கள்.